

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

2015

ජනතා වතු සංවර්ධන මණ්ඩලය

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

JANATHA ESTATES DEVELOPMENT BOARD

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

வருடாந்த அறிக்கை 2015

நிறுவன நோக்கும் பணியும்

நோக்கு

இலாபகரமான, பொருளாதார ரீதியில் வலுவுடைய அரச கூட்டமைப்பாக உருவாக்கி, உச்ச சராசரி விற்பனையையும் நியாயமான பெறுமதியையும் அண்மித்துக் கொண்டு, வலயத்தில் நல்லதொரு மத்திய நாட்டு பாரம்பரியமிக்க தேயிலை உற்பத்தியாளராக உருவாக்குதல்.

பணி

எம்மிடமுள்ள வளங்களை உச்சபட்சமாக பயன்படுத்தலும், அர்ப்பணிப்புடன் செயற்படலும், குழு நோக்கத்தை நிலைநிறுத்திச் செயற்பட்டு, எதிர்பார்க்கும் இலக்கினை அடைவதற்கு பணிமனையின் திறமையான மேம்பாட்டினுள் கைத்தொழிலில் நிரந்தர வளர்ச்சியை பெற்றுக் கொண்டு, நாட்டின் நல்விடயத்திற்காக அர்ப்பணிப்பு செய்தல்.

குறியீட்டு

1 கார்ப்பரேட் தகவல்	1 -3
2 தலைவரின் அறிக்கை	4
3 தணிக்கை மற்றும் மேலாண்மை குழு அறிக்கை	5 -6
4 தணிக்கை அறிக்கை	7 -23
5 நிதி அறிக்கை	
கணக்கியல் கொள்கைகள்	24 -34
இருப்புநிலை	35
லாபம் மற்றும் இழப்பு கணக்கு	36
பணப்பாய்வு அறிக்கை	37 -38
நிதி அறிக்கைக்கான குறிப்பு	39 -70
6 தணிக்கை குவாரிகளின் வேறுபாடுகளை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் தணிக்கை அறிக்கைகள் 2015 ஆம் ஆண்டில்	71 -72
7 2015 ஆம் ஆண்டிற்கான அமைப்பின் செயல்திறன் சுருக்கம்	73 -74
8 மேம்படுத்துவதில் எதிர்பார்க்கப்படும் நடுத்தர காலத்தின் சுருக்கம் செயல்திறன்	75
9 05 ஆண்டுகளுக்கு ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள்	76
10 JEDB இன் கடமைகள் மற்றும் பொறுப்புகள்	77
11 சொத்தின் முதலீடு JEDB க்கு சொந்தமானது	78 -80
12 ஜெட்பின் அமைப்பு	87
13 மனிதவள சுயவிவரம்	88 -89
14 செயல் திட்டம் 2017 க்கு எதிரான செயல் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை	90 -91
15 மனித வள மேம்பாட்டு திட்டம்	92 95

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

வருடாந்த அறிக்கை 2015

பெயர் :- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

சட்ட நிலைமை
கூட்டுத்தாபனம் :- 1972 ஆம் இலக்க 11 ஆம் இலக்க அரசாங்க விவசாய சட்டத்திற்காக பணி நிமித்தம் அந்தச் சட்டத்தின் கீழான இலக்கம் 199/ M மற்றும் 1976 ஆம் ஆண்டு மாசி மாதம் 06 ஆம் திகதியிலான வர்த்தமானி பிரகாரம் அரசாங்க நியதிச்சட்டமுறைமைக் கூட்டுத்தாபனமாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

முகவரி :- இல.55/75, வொக்சோல் ஒழுங்கை, கொழும்பு 02

சபை பணிப்பாளர்கள் (2015 ஜனவரி – நவம்பர்)

பொறியியலாளர் கே.எம்.எஸ்.பீ.றெகோகம	தவிசாளர்
திரு. சிவசாமி ராஜரட்ணம்	நிறைவேற்றுப் பணிப்பாளர்
திருமதி நிருபமா கருணாரத்ன	செயற்பாட்டு பணிப்பாளர்
திரு. டீ.ஜி.எம்.வீ.ஹப்புஆராச்சி	பணிப்பாளர்
திரு. ஏ.டி.எச்.எம்.ரியாஸ்	பணிப்பாளர்
திரு. ஏ.கதிரேசன்	பணிப்பாளர்
திரு. தர்சன சேனாநாயக்க	திறைசேரி பிரதிநிதி

சபை பணிப்பாளர்கள் (2015 நவம்பர் தொடக்கம்)

கலாநிதி டொக் திரு.கேனடி டி.குணவர்தன	தவிசாளர்
திரு. தரிக் ஓமர்	நிறைவேற்றுப் பணிப்பாளர்
திருமதி. நிருபமா கருணாரத்ன	செயற்பாட்டு பணிப்பாளர்
திரு. நிலு தில்ஹார விஜேதாச	பணிப்பாளர்
திரு. ஏ.டி.எச்.எம்.ரியாஸ்	பணிப்பாளர்
திரு. எஸ்.எம்.தயாரத்ன	திறைசேரி பிரதிநிதி

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

பிரதான அலுவலகத்தின் முகாமைத்துவக் குழு 2015

01. திரு. ஹிரான் துணுவில
தற்காலிக பொதுமுகாமையாளர்

02. திரு. நெவில்லே அபேரத்ன
நிர்வாகம்

03. திரு. எம்.சீ.பிரேமதிலக
முகாமையாளர் - பராமரிப்பு * போக்குவரத்து

04. செல்வி. எஸ்.டீ.டபிள்யூ.அலேன்சு
முகாமையாளர் - சட்டம்

05. திரு.கே.ஜே.டீ.பீ.ராஜசூரிய
கணக்காளர்

06. திரு. ரொஹான் பம்பரதெணிய
முகாமையாளர் - பிராந்திய அலுவலகம்

07. திரு. ஆர்.எம்.டீ.எஸ்.எஸ். ராஜபக்ஸ
உதவி உள்ளக கணக்காய்வாளர்

08. திரு. எஸ்.ஏ.எல். பெரேரா
உதவி கணக்காளர்

09. திரு. எச்.ஜி. அனுர
உதவி முகாமையாளர் - சந்தைப்படுத்துதல்

10. திரு. பத்ம குமார
உதவி முகாமையாளர் - சந்தைப்படுத்துதல்

11. திருமதி. சி.எச்.ரெட்டியெல
உதவி முகாமையாளர் - நிர்வாகம்

12. திரு. கே.ஏ.என். பெரேரா
உதவி முகாமையாளர் - போக்குவரத்து

13. திரு. ஆர்.எம்.எம். ஹலங்கொட
உதவி முகாமையாளர் - பிராந்திய அலுவலகம்

14. திரு. நாமல் விஜேதுங்க
தற்காலிக முகாமையாளர் - வன

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை
வருடாந்த அறிக்கை
தோட்ட முகாமைத்துவக் குழு 2015

தோட்டம்	பொறுப்பு முகாமையாளர்	பயிர்	
விஸ்தீரணம்(ஹெக்)	முகவரி		
போபிட்டிய	திரு.கே.ஜி.எச். கொசின்னா	தேயிலை	321.00
தொல்தோட்டை போஹில்	திரு.ஏ.எம்.டீ.ஐ. ராஜகருணா	தேயிலை	490.01
கெட்டபுலா தெல்தோட்டை	திரு. புபுது ராஜபக்ஸ	தேயிலை	410.10
கலஹா கலபொட	திரு. ஏ.பீ.டீ.ஆர். குமார	தேயிலை	752.75
கலபொட கிரேட் வெளி	திரு. எஸ்.எம்.சீ.பி. எகொடவெல	தேயிலை	465.21
தெல்தோட்டை ஹந்தான	திரு. நிசாந்தராஜா	தேயிலை	1405.63
கண்டி ஹோப்	திரு. நலின் அதுகோரல	தேயிலை	654.06
ஹேவாஹெட்ட கந்தலோயா	திரு. டீ.பீ.எஸ்.எல். பெரேரா	தேயிலை	930.79
நாவலபிட்டிய கொலபத்தன	திரு. டபிள்யூ.சீ.எஸ். பண்டார	தேயிலை	361.00
நாவலபிட்டிய லெவலன்	திரு. சீ.டீ. அலுவிகாரே	தேயிலை	1255.92
புப்புரஸ்ஸ லூல்கந்துர	திரு. எல்.பீ. அபேகோன்	தேயிலை	1048.03
தெல்தோட்டை மஹவில	திரு. ஹர்ச குமார	தேயிலை	293.64
உலபனே மௌன்ட் ஜீன்	திரு. எம்.எச்.டீ.என்.ஹெட்டிஆரச்சி	தேயிலை	301.67
வட்டவலை நாகஸ்தென்னீ	திரு. சம்பத் தயாரத்ன	தேயிலை	506.82
நாவலபிட்டிய ரஹதுங்கொட	திரு. ஜீ.ஜீ. புலசிங்க	தேயிலை	480.14
ஹேவாஹெட்ட ரொக்வூட்	திரு. ஐ.எம்.டீ.பி. இலங்கோன்	தேயிலை	426.67
ஹேவாஹெட்ட குமாரவத்த	திரு. டீ. கொடிதுவக்கு	இறப்பர்	1822.46
மோனராகலை பளை	திரு. வீ.எஸ்.பீ. த மெல்	தெங்கு	682.19
புளை தியலுகம	திரு. டபிள்யூ.வீ.டீ.ஹரிச்சந்திர	இறப்பர்	204.09
கொசலந்த தெலிபதென்ன நிகபொத்த	திரு.எஸ்.எம்.டீ. உனுசல	இறப்பர்	85.51

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

வருடாந்த அறிக்கை – 2015

தலைவரின் மீளாய்வு செய்தி

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக 2015 இற்கான ஆண்டறிக்கையினை சமர்பிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2015 இல் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களுடன் மற்றும் தொடர்ச்சியாக 03 முகாமைத்துவ சபையினால் முகாமை செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பெருந்தோட்ட சபைகளின் உறுப்பினர்களுக்கும் தொடர்புடைய தலைவருக்கும் நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் அவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டமைக்கும் தமது உயர்வான இயலுமை மற்றும் அர்ப்பணிப்பினை வழங்கியமைக்கும் உண்மையான நன்றியினை கூறுவதற்கு இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்துகின்றேன்.

கடந்த 15 வருடங்களுக்கு மேல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை தொடர்ச்சியான நட்டங்களையே அனுபவித்து வந்துள்ளது. இனங்காணப்பட்டுள்ள முக்கிய காரணங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான காணியின் 12000 ஹெக்டயரில் 1232 ஹெக்டயர் மாத்திரம் வீபீ தேயிலையினை கொண்டுள்ள அதேவேளை 2510 ஹெக்டயர் பழைய தேயிலை கன்றுகள் உடையதாகுமென்பதுடன், பயிர் செய்யப்படாத எஞ்சிய பரப்பாகவும் வெற்று காணிகளாகவும் காணப்படுகின்றன. குறைந்த கொள்ளளவின் கீழ் தொழிற்படுத்தப்படுகின்ற அனைத்து 04 தேயிலை தொழிற்சாலைகளும் அதிகரித்த நட்டங்களுக்கு பங்களித்துள்ளன. நிறுவனம் எதிர்கொண்ட அத்தகைய ஒன்று திரண்ட நட்டங்களின் காரணமாக 10 வருடங்களை கொண்ட காலப்பகுதிக்கு வழமையான விவசாய நடவடிக்கைகளை பொறுப்பேற்பது சாத்தியமுடையதாக இருக்கவில்லை.

மேற்குறித்தவற்றின் நேரடி பெறுபேறுகளாக 2015 ஆம் ஆண்டு 81,131 கிகி கொண்ட உற்பத்திப் பற்றாக்குறையொன்றினை அவதானித்தது. அதேவேளை தேறிய விற்பனை சராசரியும் ரூபா 37.57 குறைவொன்றினை காண்பித்தது. ரூபா 467.43 கொண்ட உற்பத்தி செலவு 2015 ஆம் ஆண்டில் ரூபா 497.80 ஆக மேலும் அதிகரித்தது.

இறப்பரை பொறுத்த வரையில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டுக்கு வந்த சுத்தப்படுத்தலானது 27,337 கொண்ட கி.கி கொண்ட அதிகரித்த உற்பத்தியொன்றினை தோற்றுவித்தது. எனினும் 2015 ஆம் ஆண்டில் உற்பத்திச் செலவு ரூபா 3.01 இனால் அதிகரிப்பு மற்றும் தேறிய விற்பனை சராசரியான ரூபா 12.01 இனால் வீழ்ச்சி என்பன காரணமாக இந் நலன் இல்லாமல் போயிருந்தது. மேலும் 02 மேலதிக தோட்டங்கள் அதே ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன், ஒட்டுமொத்த பரப்பு 10, 106.19 ஹெக்டயரிலிருந்து 12,990.44 ஹெக்டயராக அதிகரித்த அதேவேளை மொத்த தொழிற்படை 5439 இனை அடைந்தது. நிறுவனம் எதிர் கொண்ட பாரிய தடை பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்குமான ஊழியர் சேமநிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்புநிதியம் மற்றும் பணிக்கொடை என்பவற்றுடன் தொடர்புடைய கொடுப்பனவு நிலுவைகளாகும். இதற்காக 2015 இல் ரூபா 358.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் ரூபா 350 மில்லியன் இந்நோக்கத்திற்காக திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

மேற்குறித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி பணிப்பாளர் சபையானது கையிலுள்ள பாரிய பிரச்சினையினை எதிர் கொள்ளவும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினை நீடித்து உழைக்கும் நிறுவனமொன்றாக ஆக்குவதற்கும் பல சவால்களை தீர்ப்பதற்கும் அர்ப்பணித்துள்ளது.

கீர்த்தி பீ கொடகம,
தவிசாளர்,
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

வருடாந்த அறிக்கை – 2015

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுகூட்டம்

பின்வரும் உறுப்பினர்கள் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

1. திரு. தர்சன சேனாநாயக்க	குழு தவிசாளர்
2. திரு. டீ.ஜி.எம்.வீ. ஹப்புஆரச்சி	குழு உறுப்பினர்
3. திரு. ஏ.டி.எச்.எம்.ரியாஸ்	குழு உறுப்பினர்

பின்வரும் குழு உறுப்பினர்கள் 2015 மே 14 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்கள்.

அவதானிப்பாளர்

கணக்காய்வு கண்காணிப்பாளரும் கணக்காய்வாளர் நாயகம் தலைமை அதிபதியின் திணைக்களம்.

கூட்டம் கூட்டுபவரும் செயலாளரும்
திரு. ஆர்.எம்.டீ.எஸ்.எஸ். ராஜபக்ஸ – உதவி உள்ளக கணக்காய்வாளர்

கணக்காய்வுக் குழு 2015 ஆம் ஆண்டிற்கான 02 கூட்டங்களை நடத்தியதுடன் முதல் கூட்டம் 20.08.2015 அன்றும் இரண்டாவது கூட்டம் 09.10.2015 அன்றும் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. அங்கு பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

1. கணக்காய்வாளர் திணைக்களத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட தணிக்கை தொடர்பான சிக்கல்களுக்கு குறிப்பிடப்பட்ட காலத்திலேயே தீர்வளித்தல்.
2. 2015 ஆம் ஆண்டிற்குரிய வரவுசெலவுத் திட்ட ஆவணங்களைத் தயாரித்தல்.
3. வருடாந்த அறிக்கையை தயாரித்தல்.
4. மக்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில்
5. தேயிலை கொழுந்து விற்பனை தொடர்பாக
6. கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நேர்த்தியான முறையில் நடத்துவதில் சிரமத்தினை எதிர்கொள்ளல்
7. மக்கள் தொகை கொண்ட தோட்டங்களில் காடு வளர்ப்பு
8. மக்கள் தொகையின் சமூகத் திட்டங்களைத் தயாரித்தல்

9. நிலங்களின் விபரங்கள் மற்றும் வாடகைக்கு விடப்பட்டுள்ள நிலங்களின் ஒப்பந்தங்களைத் தயாரித்தல்
10. ஊழியர்களின் எதிர்கால வைப்பு நிதி, ஊழியர்களின் நம்பிக்கை நிதி, தோட்டத் தொழிலாளர்களின் நிதி மற்றும் இலங்கை தோட்டத் தொழிலாளர்களின் எதிர்கால வைப்பு நிதி தொடர்பான தகவல்கள்
11. "கோப்" கூட்டம் தொர்பான ஆவணங்களைத் தயாரித்தல்
12. வருடாந்த தொகை மதிப்பீட்டு பரிசீலனை
13. நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளையும் ஆவணப்படுத்துதல்
14. காலவதியான பயிர்ச்செய்கை தொடர்பில் கணக்காய்வுக் குழுவின் தீர்மானங்களுக்கு அமைவாக கணக்கியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
15. கடமை ஒதுக்கீட்டுப் பட்டியல்களைத் தயாரித்தல்
16. மரத்தோட்டங்களின் வருமானம் தொடர்பாக அறிக்கை செய்தல்
17. நிலையான சொத்து பதிவுகளை தயாரித்தல்
18. நிறுவனத்தின் கூட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்
19. நிலங்களின் வரி வருவாய் தொடர்பில் கலந்தாலோசித்தல்
20. பொது மேலாளரின் எரிபொருள் முத்திரை ஒதுக்கீடு பற்றி விவாதித்தல்

தலைவர்

கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழு

මගේ අංකය
எனது இல.
My No. } பிஎல்ஏ/ஏ/ ஜோடிபி/01/15

මගේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2017 நவம்பர் 12

தலைவர்,
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதத்தின் பேரில் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக விரிவான வருமானக்கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத அல்லது விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

2 நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமை

சபைக்குச் சொந்தமான 23 தோட்டங்கள் தொடர்ச்சியான நட்டத்தை அடைந்திருந்திருந்ததன் பேரிலும் செலுத்த வேண்டிய நியதிச்சட்ட பொறுப்பின் அளவு கூடுதலாக இருந்த காரணத்தினாலும் 2015 திசெம்பர் 31 இல் சபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 247,533,243 மறைப்பெறுமதியை எடுத்திருந்தது. இத்தேறிய சொத்துக்கள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 45 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் தொடர்ந்தும் திறைசேரியின் அல்லது அரசின் அல்லது

ஏனைய நிதி உதவி இல்லாமல் சபையை தொடர்ச்சியாக நடாத்திச்செல்வது நிச்சயமற்ற நிலைமையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் குத்தகை வருமானம், அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படாததன் காரணமாக 2014 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய குத்தகை வருமானம் ரூபா 57,562,636 தொகை மற்றும் 2016 ஆம் ஆண்டிற்குரிய குத்தகை வருமானம் ரூபா.10,791,154 மீளாய்வாண்டின் குத்தகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,082,582 ஆன தேயிலை வருமானம் மீளாய்வாண்டின் தேயிலை வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் 20(ஆ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் தலைமை அலுவலகத்திற்குரிய எனினும் பணமாக செலுத்தப்படாத ரூபா 436,819 தொகையான பணிக்கொடை மிகைக் கட்டண செலவினம் நிதியல்லாத உருப்படியொன்றாக காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னரான நட்டத்திற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் நிதிச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 10,342,876 தொகையான வங்கிக் கடன் வட்டி செயற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கப்பட்டு பணமாக செலுத்திய ரூபா 4,016,637 ஆன கடன் வட்டி செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசு வெளிப்பாய்ச்சலாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது பணமாக செலுத்தப்பட்ட நீண்டகால கடன் ரூபா 31,547,120 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகவும் வங்கியால் பதிவழிக்கப்பட்ட வட்டிச் செலவினம் ரூபா 41,367,908 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் இலாபத்திற்கு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ரூபா 70,218,840 தொகை தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

ஹந்தான மற்றும் கலஹா தோட்டங்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சியடைந்த தேயிலைச் செய்கைக்காக 2014 ஆம் ஆண்டிற்குரிய காலக்கழிவு மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 1,609,658 தொகையும் ரூபா 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,338,556 ஆன இறப்பர் பால் வருமானம் நியமத்தின் 42 மற்றும் 49 ஆம் பிரிவுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் நட்டத்திற்குச் சீர்ர்க்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 21,453,236 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 2,421,468 ஆல் குறைவடைந்திருந்தது.

2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் தேயிலை செய்கையொன்று ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் இறுதியின் போது குறித்த பயிர் செய்கைக்காக செலவிடப்பட்டு கிரயம் முதிர்ச்சியடையாத பயிர்ச்செய்கையில் இருந்து முதல் முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், ஹொப் தோட்டத்தின் 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை பயிர்ச்செய்கைக்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 14,906,126 கிரயம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் 12.5 சதவீதப் படி வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், சபையினால் நீண்டகாலமாக இருந்து இச்சொத்துக்கள் 5 சதவீதப்படி பெறுமனத்தேய்வு செய்யப்பட்ட காரணத்தினால் சபையின் கணக்கீட்டு கொள்கைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் கூடுதலாக பதிவாகிய ரூபா 2,151,516 ஆன தேயிலை வருமானம் சரி செய்யும் போது முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கம் செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டின் வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் தேயிலை வருமானம் அப்பெறுமதியால் குறைத்து பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) தோட்டங்களுக்காக தலைமை அலுவலகத்தில் பேணிச் செல்லப்படும் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,057,585 ஆன நானாவித வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் இறுதியின் போது காணப்பட்ட ரூபா 29,862,260 ஆன நடைமுறைவேலையின் பெறுமதி நடப்பாண்டில் அகற்றலாக பதிவுசெய்யப்பட்டு ஆண்டின் இறுதியின் போது காணப்பட்ட ரூபா 28,504,681 ஆன பெறுமதி சேர்த்தல்களாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் தலைமையகத்தினதும் தோட்டக் கணக்குகளின் பிரகாரம் நடைமுறைப் பெறுமதிக்காக மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட மற்றும் சேர்க்கப்பட்ட பெறுமதிகள் முறையே ரூபா 8,996,734 மற்றும் ரூபா 7,740,582 ஆக இருந்தமையால் நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானதல்ல என்பது கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே நடைமுறைவேலையாக கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியினுள் 2009 மற்றும் அதன் பின்னர் செலவிடப்பட்ட செலவினங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 20009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு இடையே அதிகளவிலான எண்ணிக்கை இதுவரையில் வெற்றியளித்திருக்கவில்லை. அம்மீதிகளை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது மவுன்ஜீன் தோட்டத்தில் அமைந்துள்ள சபைத் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,488,438 ஆன செலவினம் உரிய ஆண்டில் செலவினமாக இனங்காணாமல் நானவித கடன்பட்டோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்குரிய மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வுச் செலவினம் ரூபா 417,484 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்ததன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சமப்படுத்தல் தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(i) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 39,149,946 தொகையான பணிக்கொடை ரூபா 38,901,897 என காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 248,049 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 111,486,915 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 104,254,000 என பதிவு செய்தமை காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசு வெளிப்பாயச்சலாக ரூபா 7,232,915 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 1,089,340 பெறுமதியான ஹொப் தோட்டத்திற்குரிய உபகரணக் கணக்கில் மேற்கொண்ட சீராக்கங்கள் மற்றும் ரூபா 779,485 ஆன கொள்கலன் உபகரணங்கள் தோட்டங்களுக்கு இடையே பரிமாற்றம் நிலையான சொத்துக்கள் கொள்வனவாக கருதி முதலீட்டு செயற்பாடுகளில் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 37,038,000 தொகையான வெளிக்கள அபிவிருத்தி செலவினம், முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உருவான காசுப்பாய்ச்சலாக தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 2,618,226 ஆன பெறுமதியில் குறைவடைந்திருந்தது.

(v) காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமமானதாக ரூபா 82,220,000 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் வங்கிக் கணக்கிணக்க கூற்று மற்றும் தோட்டக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 82,183,009 அக்காரணத்தினால் ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமான மீதிகளில் ரூபா 36,901 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) பயிர்ச்செய்கை முதிர்வடையும் போது முதிர்ச்சியடையாத பயிர்ச்செய்கையின் கீழ் மூலதனமாக்கப்பட்ட பெறுமதி முதிர்வடைந்த பயிர்ச்செய்கையுடன் சேர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 761,070 கிரயமான முதிர்வடையாத ஏனைய பயிர்ச்செய்கை அகற்றப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியில் ரூபா 5,146 மாத்திரம் முதிர்வடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

(ஏ) தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் அம்பிலிப்பிட்டி கடதாசித் தொழிற்சாலைக்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்குரிய நடப்பாண்டின் 9 மாதங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 910,188 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது 04 தோட்டங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றம் முதிர்வடையாத பயிர்ச்செய்கையிலிருந்து முதிர்ச்சியடைந்ததாக இனங்காணப்பட்டிருந்த பயிர்ச்செய்கைக்குரிய பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 665,959 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) தோட்டக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது முதிர்வடையாத ஏனைய பயிர்ச்செய்கைக்காக செலவிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 114,708 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இ உள்ளவாறு ஐந்தொகையின் பிரகாரம் முதிர்வடையாத ஏனைய சொத்துக்களின் கீழ் ரூபா 1,502,872 பெறுமதியொன்று சேர்க்கப்பட்டமையால் ரூபா 1,388,164 ஆன பெறுமதியால் அச்சொத்துக்கள் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தோட்டங்களுக்கு இடையே பொருட்கள் மற்றும் பணப் பரிமாற்றத்தின் பேணப்படும் நடைமுறைக் கணக்கின் மீதியில் (Inter Etate Transaction) ஒன்றுக்கொன்று ஈடாக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் தோட்ட கணக்குகளுக்கு இடையே ஈடுசெய்யப்படாத ரூபா 8,421,948 வரவு மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் லூல்கந்துர மற்றும் நாகஸ்தன்ன ஆகிய இரண்டு தொழிற்சாலைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேயிலை வருமானம் மற்றும் அத்தோட்டங்களின் அறுவடை பேரேட்டில் (crop ledger) குறிப்பிடப்பட்ட தேயிலை வருமானத்திற்கிடையே ரூபா 495,200 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) 06 தோட்டங்களுக்குரித்தாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த பணிக்கொடை ஒதுக்கீடு. செலுத்த வேண்டிய பணிக்கொடை மற்றும் பணிக்கொடை மிகை ஒதுக்கீடு கணக்கு ஆகிய மூன்று கணக்குகளின் மீதிகள் அதற்குரிய பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 1,096,616 தொகை, ரூபா 2,739,733 தொகை மற்றும் ரூபா 158,272 ஆன வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஈ) விற்பனை பட்டியலின் பிரகாரம் முடிவுத் தேயிலை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 8,252,037 தொகையான விற்பனைச் செலவினம் ரூபா 6,965,307 ஆக காண்பிக்கப்பட்டமை காரணமாக அச்செலவினம் ரூபா 1,286,731 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் தோட்டக் கணக்கின் பிரகாரம் முதிர்ச்சியடையாத தேயிலை பயிர்ச்செய்கைக்காக (Immature Plantation – Tea) செலவினமொன்று மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் ரூபா 3,542,254 ஆன செலவினம் முதிர்ச்சியடைந்த தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் தோட்டக் கணக்கின் பிரகாரம் முதிர்ச்சியடைந்த தேயிலை பயிர்ச்செய்கையின் கீழ் எவ்வித அகற்றலும் அவதானிக்கப்படாத போதிலும்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ரூபா 5,040,303 பெறுமதியான முதிர்ச்சியடைந்த தேயிலை பயிர்ச்செய்கையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அம்மீதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தன.

விடயம்		பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்	
		(ரூபா)		
(அ)	கட்டிடங்கள்	1539,765,345	(i)	பட்டோலை
			(ii)	நிலையான சொத்துப் பதிவேடு
(ஆ)	03 தோட்டங்களுக்குரிய பணிக்கொடை ஒதுக்கீடு, செலுத்த வேண்டிய பணிக்கொடை மற்றும் பணிக்கொடை மிகை கட்டண ஒதுக்கீடு	209,061,775	பணிக்கொடை கொடுப்பனவு பட்டோலை	
(இ)	வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகள்	550,234,588	(i)	பட்டோலைகள்
			(ii)	கடன்பட்டோர் மீதி வயதுப் பகுப்பாய்வு
			(iii)	மீதி உறுதிப்படுத்தல் பதிவேடுகள்
(ஈ)	செலுத்த வேண்டிய வியாபார கணக்குகள்	549,734,176	(i)	பட்டோலைகள்
			(ii)	கடன்கொடுத்தோர் மீதி வயதுப் பகுப்பாய்வு

2.3 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 39,606,458 ஆன குத்தகை வாடகை வருமானமொன்றினையும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு பாதுகாப்பு சேவைகள் வழங்கியமைக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 6,701,445 ஆன வருமானத்தையும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 7,083,975 ஆன தோட்ட கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு உரித்தான தேயிலை விற்பனைக்குரிய அரசின் வர்த்தக நிறுவனமொன்றிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,717,404 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு	இணங்காமை
(அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம்	உரிய அதிகாரச்சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனம் சட்டரீதியான பொறுப்புக்களை முறையாக தீர்வு செய்யாததன் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 327,882,739 தொகை, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 26,441,310 தொகை, தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா 3,328,025 தொகை இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழிலாளர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா 4,017,078 தொகை செலுத்த வேண்டிய பணிக்கொடை ரூபா 418,598,740 மற்றும் வழக்குத்

		தீர்ப்பின் பேரில் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 505,661,148 உட்பட செலுத்த வேண்டிய சட்டரீதியான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,259,487,731 ஆக இருந்தது.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை	
	(i) VIII ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு	மேலதிக படிகள் உரித்தற்ற பதவிநிலை தர உத்தியோகத்தர்களுக்காக வார இறுதியிலும் அரச விடுமுறை தினங்களிலும் கடமை புரிவதற்காக மேலதிக நேரப்படிகளாக ரூபா 23,407 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.
	(ii) XLVIII ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு	சபையின் வேலை இடை நிறுத்தத்திற்கு உட்பட்ட சாரதிக்காக ஒழுக்காற்றுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வேலை இடை நிறுத்தத்திற்கு உட்பட்டதன் பின்னர் 13 மாத காலப்பகுதிக்காக ரூபா 97,403 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 175(1)"ஆ"	சபைக்கு கிடைக்க வேண்டிய மொத்தப் பணம், சேகரிக்கப்பட்ட பணம் மற்றும் நிலுவையாக காணப்படும் மொத்தப் பணம் என்பவற்றை காண்பிக்கக்கூடிய வகையில் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதால் கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய குத்தகை அளவினை நிச்சயமாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
	(i) 2013 சனவரி 13 ஆந் திகதிய 1/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2007 ஆம்	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 60 வயது பூர்த்தியாகிய தோட்ட அத்தியட்சகர் ஒருவரை ஓய்வுபெறச் செய்வதற்குப் பதிலாக ஓய்வுபெறச்

	ஆண்டில் விநியோகிக்கப்பட்ட மதியுரையாளர்களை நியமிப்பதற்கான வழிகாட்டல் கோவை	செய்ய வேண்டிய திகதி முதல் சபையின் மதியுரையாளராக சேவை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 07 மாதங்களுகாக ரூபா 779,106 படிகளாக வழங்கப்பட்டிருந்தது.
(ii)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.9 ஆம் பந்தி	ஒரு மாதத்திற்குள் மேலதிக நேர படிகளாக செலுத்தப்படும் சகல கொடுப்பனவு தொடர்பாக தகவல்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட்டு அது தொடர்பாக விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடுகள் பேணப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிட்டோ அல்லது குறித்த பதிவேடுகள் பேணப்பட்டோ இருக்கவில்லை.
(ஊ)	அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.3.2 பிரிவு	பணம் வழங்கும் நிதி மூலம் கருத்திற்கொள்ளாமல் ஒவ்வொரு பெறுகைநடவடிக்கைக்கும் இவ்வழிகாட்டி உரித்தாக்கப்பட வேண்டிய போதிலும் கொள்வனவு செயற்பாட்டிலிருந்து விலகி மீளாய்வாண்டின் போது வாகன திருத்தங்களுக்காகவும் தொழிற்சாலை திருத்த வேலைகளுக்காகவும் ரூபா 3,949,695 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
(ஊ)	2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் போது 9 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 264,935 தொகையான முற்பணம் செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 443,532,303 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 413,342,667 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 30,189,636 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 86,401,287 ஆல் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு மொத்த நட்டம் ரூபா 103,809,185 ஆல் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளது வீழ்ச்சிக்கான பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முக்கியமான தொழிற்படு மூலதன மற்றும் இலாபதன்மை விகிதங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

நிதி நிலைமை	2015	2014
நடைமுறை சொத்து விகிதம்	0.26:1	0.23:1
விரைவுச் சொத்து விகிதம்	0.24:1	0.19:1
மொத்த இலாப விகிதம்	(73%)	(49%)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சட்டரீதியான பொறுப்புக்களை தீர்வுசெய்வதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த மானியங்களை பயன்படுத்தியதன் காரணமாக சபையின் திரவத்தன்மை மட்டத்தில் சிறிய அதிகரிப்பொன்று தென்பட்ட போதிலும் நடைமுறைப் பொறுப்புக்களில் சட்டரீதியான கடப்பாடொன்று காணப்படும் ரூபா 1,259 மில்லியனுக்கு மேற்பட்ட பொறுப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) சபை உழைத்த மொத்த நட்டம் மேலும் அதிகரித்திருந்ததுடன் அது 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 32 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குரிய குத்தகை காணிகளில் 21 காணிகளின் குத்தகைக் காலம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியும் 25 காணிகளின் குத்தகைக்காலம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியும் முடிவடைந்திருந்தன. இக்காணிகளை மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கோ அல்லது குத்தகை ஆதனங்களை மீளக் கையேற்பதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) எழுத்துமூல உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் எம்பிலிபிட்டிய கடதாசி தொழிற்சாலைக்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து சபையின் 12 உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கடதாசி கூட்டுத்தாபனத்தினால் குறித்த ஊழியர்களுக்கு மேலதிக நேரம் கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 877,616 ஆன மேலதிக நேரப் படிகள் அந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படுவதால் அக்கூட்டுத்தாபனத்திற்கு சபையினால் செலுத்த வேண்டிய பணத்திலிருந்து செலுத்தப்பட்ட மேலதிக படிகள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உரிய நிறுவனத்துடன் இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்கவில்லை.

(இ) ரிட்டிகல தோட்டத்திற்காக சபையினால் 2010 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்பு சேவை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அனுமதியற்ற 137 குடியிருப்பாளர்கள் அங்கு குடியிருந்தனர். அது தொடர்பாக முகாமைத்துவத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் சபையின் நுகர்வோர் பிரிவுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொண்ட செய்த 20 மற்றும் 25 கொள்வனவாளர்கள் முறையே 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது சபைக்கு இழக்கப்பட்டிருந்தனர். அதன் மூலம் சபைக்கு இழக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை விற்பனை வருமானம் ரூபா 4,504,758 ஆக இருந்தது. இதற்கு தேயிலை தரம் வீழ்ச்சியடைந்தமை, போட்டிக்கு முகங் கொடுப்பதற்காக தேயிலை விற்பனைக்கான மேம்படுத்தல் செயற்பாடு பின்பற்றப்படாமை, கடன் முகாமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனங்கள் இதற்கான காரணங்களாகும்.

4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் யூன் மற்றும் யூலை மாதங்களில் ஹந்தான தோட்டத்தில் பறிக்கப்பட்ட தேயிலை கொழுந்து ஏனைய மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட விலையை விட முறையே ரூபா 12.50 மற்றும் ரூபா 10 குறைத்து விற்பனை செய்யப்பட்டமை சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 619,160 ஆக இருந்தது.

4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குரிய 5 தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்பாடற்ற நிலைமையில் காணப்பட்டதுடன் அத்தொழிற்சாலைகளில் ரூபா 7,639,107 புத்தகப் பெறுமதியான இயந்திரங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை பயன்படுத்தக்கூடிய மட்டத்திற்கு கொண்டு வராமல் உருக்குலைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஹோப் தோட்டத்தில் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட குடி நீர்ப் போத்தல் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,394,815 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அவ்வாண்டிலிருந்தே பெறுமானத்தேய்வு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கைவிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

விலியமுள்ள தோட்டத்திற்குரிய காணியை மீள குத்தகைக்கு வழங்கும் போது புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் குத்தகை அறவிடப்படாததன் காரணமாக 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு இழக்கப்பட்டிருந்த குத்தகை வாடகை வருமானம் ரூபா 3,388,350 ஆக இருந்தது.

4.5 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

ஒரு ஹெஹக்டேயருக்கான ஏலக்காய் விளைச்சல் 60 கிலோ கிராமாக இருந்த போதிலும் கந்தல்ஓயா தோட்டத்தில் உள்ள 08 ஹெக்டேயரிலான ஏலக்காய் செய்கையிலிருந்து மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொண்ட விளைச்சல் 68 கிலோ மாத்திரமாக இருந்தன. எவ்வறாயினும் மீளாய்வாண்டின் போது அப்பயிர்செய்கையின் பாதுகாப்பு மற்றும் விளைச்சலை அறுவடை செய்வதற்காக ரூபா 1,497,330 செலவிடப்பட்டிருந்தது.

4.6 பதவியணியினர் நிர்வாகம்

(அ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்கு அவ்வாறான ஆட்சேர்ப்பு மற்றும் உயர்வு நடைமுறையொன்று தயாரிக்கப்படாதிருக்கையில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்காக இரண்டு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத பதவியொன்றான சந்தைப்படுத்தல் மதியுரையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது 6 மாதங்களுக்காக ரூபா 555,000 ஆன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 03 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கூட்டுத்தாபனத்தினால் 2015 ஆம் ஆண்டின் கணக்குகள் 2016 திசெம்பர் 01 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்	அவதானிப்புக்கள்
(அ) கணக்கீடு	கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க

கணக்குகள் தயாரிக்கப்படாமை.

(ஆ)	குத்தகை ஆதனங்கள் பராமரித்தல்	ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் குத்தகை வருமானங்களை அறவிடுவதற்கும் குத்தகை ஆதனங்களைப் பாதுகாப்பதிலும் குறைபாடுகள் காணப்பட்டமை
(இ)	கொடுப்பனவு கட்டுப்பாடு	ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கு கொடுப்பனவு நடவடிக்கைகள் முறைமைப்படுத்தாமை.
(ஈ)	தேயிலை பயிர்ச்செய்கை நடவடிக்கைகள்	உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கும் உற்பத்திக் கிரயமத்தை குறைத்துக் கொள்வதற்கும் கவனம் செலுத்தப்படாமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

1. நிறுவனத் தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையானது 1972 இன் 11ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1976 பெப்ருவரி 6 ஆம் திகதியிடபட்ட 199/1எம் ஆம் இலக்கமிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பட்டது. பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் 2015.12.31 அன்று உள்ளவாறான நிதியியல் கூற்று தலைமை அலுவலகத்தினையும் அதன் 16 தேயிலை தோட்டங்களையும், 3 இறப்பர் மற்றும் 1 தெங்கு தோட்டத்தினையும் உள்ளடக்குகின்றது.

1.2 முதன்மை நடவடிக்கையும் தொழிற்பாடுகளின் தன்மையும்

மீளாய்வுக்குட்படும் நிதியியல் ஆண்டின் போது சபையின் முதன்மை நடவடிக்கைளின் தன்மையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படவில்லை. சபையின் முதன்மை நடவடிக்கைகள் தேயிலை மற்றும் இறப்பர் பயிரிடுதல், தயாரித்தல், விற்பனை செய்தல் என்பனவாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையானது தரகர்கள் மூலமான தேயிலை விற்பனைக்கு மேலதிகமாக (பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி) உள்நாட்டு தேயிலை விற்பனை நிலையத்தினை (ஜனதா தேயிலை/ மக்கள் சேவை)நிலையத்தை நடாத்துகின்றது.

2. தயாரித்தல் அடிப்படை

2.1 இணங்குவித்தல் கூற்று

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் நிதியியல் கூற்றானது ஐந்தொகை, வருமானக் கூற்று, பங்கு மூலதனங்களில் மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று அத்துடன் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இந்நிதியியல் கூற்றுகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினாலும் 1995 இன் 19 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு தரநியம சட்டத்தினாலும் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2. அளவீட்டு அடிப்படை

நிதியியல் கூற்றுகள் வரலாற்று செலவு நடைமுறை அடிப்படைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வரும் குறிப்புகளில் பொருத்தமான,திட்டவட்டமான

கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. நிதியியல் கூற்றுகளில் பணவீக்க காரணிகளுக்காக சரிப்படுத்தல் ஏதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவிலை என்பதுடன் இந்த நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 மதிப்பீடுகளையும் தீர்வுகளையும் பயன்படுத்தல்

நிதியியல் கூற்றுகளை தயாரித்தலானது சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளை பாதிக்கின்ற தீர்வுகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை போன்றவற்றை மேற்கொள்வதற்குமுகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. மதிப்பீடுகளும் அதனோடு இணைந்த ஊகங்களும் வரலாற்று ரீதியான அனுபவங்களையும் அதே போன்று சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக நம்பப்படுகின்ற பல்வேறு வேறு காரணிகளையும் அடிப்படையாக கொண்டவை. அதன் பெறுபேறுகள் சொத்துகள் கொண்டுள் பெறுமதி மற்றும் வேறு மூலங்களில் இருந்து உடனடியாக புலப்படாத பொறுப்புகள் என்பன பற்றிய தீர்மானங்களை செய்வதில் இருந்தானவையாகும். இம்மதிப்பீடுகளில் இருந்து உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம். மதிப்பீடுகளும் துணையளிக்கும் ஊகங்களும் முன்னெடுக்கப்படுகின்ற அடிப்படையொன்றில் மீளாய்வுசெய்யப்படகின்றன. திருத்தங்கள், நடப்பு மற்றும் எதிர்கால நிதியியல் ஆண்டு இரண்டையும் பாதிக்குமாயின்கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியில் இனங்காணப்படுகின்றது.

2.4. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

நிறுவனத்தின் தொடர்ந்து எண்ணக்கருவிற்காக அரசாங்க தனியார் மற்றும் ஊழியர் பங்குடமையின் கீழ் சபையானது மீள் கட்டமைக்கப்பட வேண்டுமென்ற மதிப்பீட்டினை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளது. மீள்கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டமானதுபயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தும் சொத்துகள் மற்றும் ஆதனங்களில் முதலிடும் நோக்கமொன்றுடன் தனியார் முதலீட்டாளர்களுடனான கூட்டுமுயற்சியுடன் தற்போது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. புதிய முதலீடுகளிலிருந்து ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருமானத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் உள்ளங்களாக நீண்ட கால நிலுவைகள் தீர்ப்பனவு செய்யப்படும். நிதித் தீர்ப்பனவுகள் தொடரந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பபட்டுள்ளதுடன் மீள்கட்டமைத்தல் நிகழச்சித்திட்டம் நடைமுறைபடுத்தப்படும் வரை தீரத்துகட்டவோ அல்லது ஏதேனும் வியாபார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவோ அவர்கள் உத்தேசிக்கல்லை.

2.5 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டு கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தபட்டவைபோன்றே மாற்றமன்றி சபையினால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத் தொகைகளும் வாசகங்களும் நடப்பாண்டில் எடுத்துரைப்பதற்கு அவசியப்படின் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

2.6 ஐந்தொகை பின் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகைக்கு பிந்திய முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட்டு நிதியியல் கூற்றுகளில் பொருத்தமான சரிப்படுத்தல்கள் அல்லது நிதியியல் கூற்றுகளுக்கு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. ஏனைய தகவல்கள்

3.1 மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை – கல்லேபொக்க தோட்டம்

மேற்குறித்த தோட்டம் பான் ஏசிய வங்கி கூட்டுத்தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதுடன், 1999 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன் நிதியியல் வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. நிலுவையின் ஒரு பாகம் காலத்துக்கு காலம் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய வட்டிகள் வங்கியின் சம்மதத்துடன் பதிவழிப்பு செய்யப்பட்டள்ளன. இதன் விளைவாக 2015 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு ஐந்தொகையில்ரூபா 69,536,282.63 நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது.

3.3 பணிப்பாளர் சபை மாற்றங்கள்

2015 ஆம் நிதியாண்டின் போது 2015 யூன் மாதம் தொடக்கம் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது.

4. முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

கீழே குறித்துரைக்கப்படும் கணக்கீட்டு கொள்கைகள் அனைத்து காலத்திற்கும் மாற்றமின்றி பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

4.1 கடன்பாட்டு செலவுகள்

கடன்பாட்டு செலவுகள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் செலவொன்றாக இணங்காணப்படுகின்றன.

எனினும் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமான காலமெடுக்கின்றதகமை பெறுகின்ற சொத்தொன்றின் கையேற்பிற்கு, நிர்மாணத்திற்கு அல்லது உற்பத்திக்கு நேரடியாக சாட்டத்தக்கவை குறித்த சொத்தின் பாகமொன்றாக மூலதனமாக்கப்பட்டுள்ளன. மூலதனமாக்கப்படாத கடன்பாட்டு செலவுகள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் செலவொன்றாக இனங்காணப்படுவதுடன், வருமானக்கூற்றில் விதிப்பனவு செய்யப்படுகின்றன.

4.2 சொத்துகளும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படைகளும்

நடைமுறையல்லாத சொத்துகள் நீண்ட காலமாக மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்டிருக்கவிலை. எனவே அவற்றின் தற்போதைய பெறுமதி நிதியியல் கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட தொகைகளிலிருந்து வேறுபடுவதாக இருக்கும்.

4.2.1 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை இனங்காண்தலும் அளவிடுதலும் ஒன்றுதிரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்பிழப்பு நட்டங்களை கழித்து செலவு / விலைமதிப்பீட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதனம் ,பொறித்தொகுதி மற்றும் உபகரணச் செலவு என்பது அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கான அதன் பணியாற்றும் நிலைமைக்கு சொத்துகளை கொண்டுவருவதில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளுடன் சேர்த்து கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவாகும்.

4.2.2 பெறுமானத் தேய்வு/ பெறுமதி இழப்பு

பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடானது அத்தைகய சொத்துகளின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு பொருளாதார ஆயுட்காலம் மீதான அத்தகைய தொகைகளை பதிவழிக்கும் பொருட்டுஅனைத்து ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களினதும் செலவின் அல்லது மீள்பெறுமதிமதிப்பீட்ன் மீதுநேர் நிரை முறையினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. கீழே குறிக்கப்பட்ட வீதங்களில் சொத்துகளின் பயன்பாட்டு ஆயுட் காலம் மீது அவை பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன.

	தோட்டங்கள்	தலைமை அலுவலகம்
கட்டிடங்கள்	5%	5%
பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் (பழையது)	33.33%	12.5%
பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் (புதியது)	20%	20%
லயன்களும் கழிவறைகளும்	5%	
மோட்டார் வாகனங்கள்	25%	25%
தளபாடம் மற்றும் பொருத்துகள்	12.5%	12.5%
முதிர்ந்த தோட்டங்கள்	5%	
வீதிகள் மற்றும் பாலங்கள்	5%	
நீர் மின்சார பொறித்தொகுதி	5%	
கணனிகள் மற்றும் அச்சு இயந்திரம் (புதியவை)	20%	20%
கணனிகளும் மற்றும் அச்சு இயந்திரங்களும்	12.5%	12.5%

4.2.3 நிரந்தர காணி அபிவிருத்தி செலவுகள்

நிரந்தரக் காணி அபிவிருத்தி செலவுகளானவை புதிய வழிப் பாதைகளையும் ஏனைய பிரதான உட்கட்டமைப்புகளையும் கட்டுவிப்பதற்கு காணி சமவுயரக் கோடுகளுக்கான பிரதான மாற்றங்களை ஏற்படுத்த ஏற்பட்ட செலவுகளாகும். இவ் வகையான கருத்திட்டங்களுக்காக ஏற்பட்ட செலவு சபையின் பெறுமானத் தேய்வு கொள்கைக்கு அமைவாக (வீதி, பாலங்கள் வேலி போன்றன) பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன், மூலதனமாக்கப்பட்டுள்ளன.

4.2.4 ஹேனமுல்ல மட்டக்குளிய இல் காணி மற்றும் கட்டடத்தை கையுதிர்தல்

மட்டக்குளி மாதம்பிட்டியில் உள்ள காணி மற்றும் கட்டடம் : 5 ஏக்கர்,ரூ 0 பே 26 காணி 2013.03.04 அன்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது.

மேலே குறித்துரைக்கப்பட்ட காணி 1983 இல் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 1986 இல் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 1983 தொடக்கம் 2013 ஆண்டு வரை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் கணக்கு ஏடுகளில் தன. ரூபா 71,227,681 கொண்ட பெறுமதிபதிவு செய்யப்பட்டு வருகின்றன. கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட பெறுமதிகளை அகற்றும் பொருட்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை சொல்லப்பட்ட ஆதனத்தின் விற்பனை பெறுமதியினை பெற்று கொள்ள வேண்டும். மக்கள்தோட்ட அபிவிருத்தி சபையானது ஆதனத்தினை மாற்றுவதற்கான விலையிட்டினை பெற்றுக்கொள்ளாதவிடத்து இத்தொகை 2013 ஆம் ஆண்டுக்கான நிலையான சொத்துக்கள் விற்பனை மீதான நட்டமாக இலாபம் மற்றும் நட்டத்திற்கு பதிவழிப்புச் செய்யப்பட வேண்டும். ஆதனத்தை கையளிப்பதற்கு முன்னர் அது கே போர்ட் பிரைவட் லமிடட் நிறுவனத்திற்கு மாதாந்த வாடகையாக ரூபா 686,391.19 தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ரூபா 1,379,728 கொண்ட தொகை 2012 ஆம் ஆண்டுக்கான வருமானக் கூற்றுக்கு எடுக்கப்பட்டடிருந்தது.

மேற்குறித்த ஆதன மாற்றல் 2015 ஆம் ஆண்டுக்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை கணக்கு ஏடுகளில் கணக்கில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கு காரணம் தீர்ப்பனவு செய்தல் மீது இறுதித் தீர்மானம்இன்று வரை எடுக்காமையாகும்.

4.2.5 முதலீட்டு ஆதனங்கள் (வாடகைக்கு விடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்கள்)

ரூபா 130,367,401.13 கொண்ட தொகை 2015 ஆம் ஆண்டுக்கான முதலீட்டு ஆதனங்களில் இருந்து மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை வருமானக் கூற்றில் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும் தொடர்புடைய குறித்த சொத்துகள் இனங்காணப்பட முடியாதுள்ளதுடன், நடைமுறையற்ற சொத்துகள் அட்டவணை அல்லது நிலையான சொத்துகள் பதிவேடு கிடைக்கப்பெறாமை நிலையான சொத்துகள் என்ற பெயரில் ஐந்தொகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களின் போது நிலையான

சொத்துகள் பதிவேடுகள் அவசியமான தகவல்களை கொண்டு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2.6 வரையறை செய்யப்பட்ட ஆயுள் காணி அபிவிருத்தி செலவுகள்

முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாத தோட்டங்கள்

தோட்ட அபிவிருத்திக் காலம் மற்றும் வர்த்தக ரீதியான அறுவடைக்காக தயார் நிலையில் உள்ள காலம் என்பவற்றுக்கிடையில் ஏற்பட்ட புதிய நடுகை, மீள்நடுகை, இடை நடுகை மற்றும் பயிர் பன்முகப்படுத்தல் என்பவற்றின் செலவுகள் முதிர்வடையாத தோட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இம் முதிர்வடையாத தோட்டங்கள் தோட்டங்கள் மீது ஏற்பட்ட நிருவகித்தல் செலவுடன் சேர்த்து நேரடிச் செலவாகக் காட்டப்பட்டுள்ளதுடன் காட்டப்பட்டுள்ளதுடன் முதிர்வடையாத பிரதேசங்களின் தொடர்புடைய மீள் நடுகை மற்றும் புதிய நடுகை என்பன மீது செலவிடப்பட்ட தொழில் நாட்களை அடிப்படையாகக் கொண்டு தோட்டம் பங்கீடுசெய்யப்பட்டு முதிர்ச்சியடையாத பிரதேசங்களில் மூலதனமாக்கப்பட்டுள்ளது. ஆண்டின் போது பயன்தரக் கூடியதான நீடித்து வாழும் பயிர் (தேயிலை/ இறப்பர்) தோட்டங்கள் மீது ஏற்பட்ட செலவினம் முதிர்வடைந்த தோட்டங்களுக்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளதுடன், பயன்பாட்டு ஆயுட் காலத்தின் மீது பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

	முதிர்வடையாத காலம்	அறுவடை ஆரம்பித்தல்
தேயிலை	1 – 4 ஆண்டுகள்	05 ஆவது ஆண்டு
இறப்பர்	1 – 6 ஆண்டுகள்	07 ஆவது ஆண்டு

4.2.7 இடைநிரப்புதல் செலவு

இடைநிரப்பலானதுதொடர்புடைய தோட்டமொன்றின் முன்னர் மதிப்பிடப்பட்ட செயலாற்றுகை தரத்தினைத் தாண்டி அது பொருளாதார ஆயுளினை அதிகரிப்பதில் பெறுபேறுகளை ஏற்படுத்துமாயின், இலங்கை கணக்கீட்டு நியமம் - 32 "தோட்டங்கள்" இற்கு அமைவாக செலவுகள் மூலதனமாக்கப்பட்டு முதிர்வடைந்த தோட்டங்களுக்கு ஏற்புடைய வீதத்தில் பயன்பாட்டு ஆயுளின் மீது பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

மூலதனமாக்கப்படாத இடைநிரப்புதல் செலவுகள் அவை ஏற்பட்ட ஆண்டில் வருமானக் கூற்றுக்கு விதிக்கப்படுகின்றன.

4.2.8 பொருட் பதிவேடுகள்

பொருட் பதிவேடுகள்/கையிருப்புகள் குறைந்த செலவில் விலைமதிப்பிடப்பட்டுநிகர தேறத்தக்க பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. நிகர தேறத் தக்க பெறுமதியானது சாதாரண வியாபாரத்தின் போது மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் நிறைவு செய்தல் மற்றும் விற்பனை செலவுகள் என்பவற்றில் மதிப்பிடல் செலவுகளை கழித்த பெறுமதியாகும்.

தயாரிக்கப்பட்டபொருட்கள் பதிவேடு விடயத்தில், செலவானது சாதாரண தொழிற்பாட்டு கொள்ளளவினை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலை நிருவாகச் செலவின் பொருத்தமான பங்கை உள்ளடக்குகின்றது.

ஐந்தொகை திகதி வரை தயாரிக்கப்பட்ட மற்றும் அப்போதிருந்து நிதியியல் கூற்றுகள் தயாரித்த நேரம் வரை விற்பனை செய்யப்பட்டவை,அப்போதிருந்து தேறத்தக்க விலையில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மீதி கையிருப்புகள் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் விலைமிப்பீடு செய்யப்பட்டுள்ளன. விலைகள் பொது ஏலத்துடன் தொடர்புடைய அனைத்து சாட்டத்தக்க செலவுகளும் கழிக்கப்படடவையாகும். தேயிலை கிலோ கிராம் ஒன்றின் உற்பத்தி செலவு எப்போதும் நிகர தேறத்தக்க பெறுமதியினை விட உயர்வானதாகும்.

4.2.9 வர்த்தக ஏனைய கிடைக்ககத்தக்கவை

வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் வரா மற்றும் ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஏற்பாடுகளை கழித்து அவை தேறுவதற்கு மதிப்பிட்ட தொகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.2.10 காசும் காசுக்கு சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவைகளும் காசு நிலுவை மற்றும் கேள்வி வைப்புகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. கேள்வியின் மீது மீள கொடுப்பனவு செய்யத்தக்க வங்கி மேலதிகப் பற்று மற்றும் காசு முகாமைத்துவத்தின் முழுமையாக்கும் பாகம் என்பன காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கங்களுக்காக காசு மற்றும் காசுக்கு சமமானவைகளுக்கான கூறுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

05. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

5.1. ஊழியர்களுக்கான ஓய்வு நலன்கள்

அ. வரையறைசெய்யப்பட்ட நலத் திட்டங்கள்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம், 1978 இன் 34 ஆம் இலக்க இந்தியர் நாட்டுக்கு திருப்பி அனுப்புதல் சட்டம் என்பவற்றின் கீழ் வேண்டப்பட்டவாறு தகைமையுடைய ஊழியர்களுக்கு ஓய்வு நலத் திட்டம் பின்பற்றப்படுகின்றது. ஓய்வு நலச் செலவு மீது இலங்கை கணக்கீட்டு நியமம் - 16 (2006 இல் திருத்தப்பட்டது.) இதற்கு இசைவாக அனைத்து ஊழியர்களுக்கும் சேவையின் முதலாம் வருடத்திலிருந்து ஓய்வு பணிக்கொடைக்காக நிதியியல் கூற்றுகளில் போதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைவாக ஊழியர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்வதற்கான பொறுப்பானது 05 வருட தொடர்ச்சியான சேவையினை பூர்த்தி செய்ததன் பின்னர் மாத்திரம் எழுகின்றது. நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகளில் பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆ. முன்னாள் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை எதிர்கொண்ட திரவத் தன்மை பிரச்சினையின் காரணமாக கடந்த 15 வருடங்களின் போது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை தோட்டங்களின் 3,977 முன்னாள் ஊழியர்களுக்கு பணிக்கொடை செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணிக்கொடை சரியாக கணிக்கப் பட்டிருக்கவில்லை என்பதுடன், 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற திகதியில் உள்ளவாறு தோட்டங்களின் கணக்கேடுகளின் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டுகளின் போது இணக்கம்பார்க்கப்பட்டிருக்கவில்லை. பணிக்கொடை கொடுப்பனவு தாமதத்தின் மீது 30% மேலதிக விதிப்பனவுக்காக 2015 இல் வருமானக்கூற்றில் ரூபா 6,717,216.94 விதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பெருந்தோட்ட சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுத்த முன்னாள் ஊழியர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக ரூபா 25,315,453.90 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் ஊழியர்களுக்கு ரூபா 86,374,322.73 கொடுப்பனவு செய்யப்பட்டது.

இ. பணிக்கொடைக்கான ஏற்பாடு

